விழுப்புரம் ஓங்கூர் அருகே பழுதடைந்த பாலத்தை சீர் செய்யும் பணி: அமைச்சர் வேலு நேரில் ஆய்வு

10–ந் தேதிக்குள் பணி முடிவடையும்

சென்னை, ஆக.4–

சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஆத்தூர் சுங்கச்சாவடியினை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில், ஓங்கூர் அருகே பழுதடைந்த பாலத்தினை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை – திருச்சி சாலையில், ஆத்தூர் சுங்கச் சாவடியினை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில், ஓங்கூர் அருகே பழுதடைந்த பாலத்தினை, (கி.மீ.104/050ல்) அமைந்துள்ள இடதுபுறச் சாலையில் அமைந்துள்ள பழைய பாலம் 13.080 மீட்டர் அகலமுள்ள 4 கண்கள் (ஸ்பேன்ஸ்) கொண்டதாகும்.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக, நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும்போது, பழைய பாலத்திற்கு இணையாக, ஒரு புதிய பாலம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இந்தப் பழைய பாலத்தின் ஓடுதளம் 8.50 மீட்டர் அகலம் கொண்ட 3 டி.பீம்களுடன் கட்டப்பட்டுள்ளது.

வலது புறம் ஓரத்தில் உள்ள டி.பீம் இடம் பெயர்ந்ததன் காரணமாக அதிக வாகன எடையினால், பையர் கேப் (pier cap)க்கு அதிர்வு ஏற்பட்டு இதன் கீழுள்ள தாங்கு தகடு சேதமடைந்து சீரற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பியரிங்கின் கீழ் அமைந்துள்ள உலோகம் சிதைந்த நிலையில் உள்ளது.

இந்தப் பாலத்தில் தாங்கு தகடுகள் மற்றும் விரிவடையும் தன்மை கொண்ட இணைப்புகள் புதிதாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாகனப் போக்குவரத்து முழுவதும் வலப்புறம் அருகிலுள்ள புதிய பாலத்தில் 28.7.2022 முதல் திருப்பி விடப்பட்டு, பழைய பாலத்தில் பழுதுபார்க்கும் பணிகள், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாயிலாக நடைபெற்று வருகிறது. இப்பணி 10–ந் தேதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், விழுப்புரம் கலெக்டர் மோகன், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ந.ஸ்ரீநாதா, தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநர் சைதன்யா, தலைமைப் பொறியாளர்கள் பாலமுருகன், சந்திரசேகர் மற்றும் கோட்டப் பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

உரிய காலத்தில் பொருளாதார உதவி வழங்கி இலங்கைக்கு உயிர் மூச்சு அளித்த இந்தியாவுக்கு நன்றி

ரணில் விக்ரமசிங்கே உருக்கம்

கொழும்பு, ஆக.4

உரிய காலத்தில் பொருளாதார உதவி வழங்கி, இலங்கைக்கு உயிர் மூச்சு அளித்த இந்தியாவுக்கு நன்றி என இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கே உருக்கமாக கூறினார்.

இலங்கை நாடாளுமன்றம் 7 நாள் இடைவெளிக்கு பிறகு நேற்று மீண்டும் கூடியது. புதிய அதிபர் ரணில் விக்ரமசிங்கேவுக்கு நாடாளுமன்ற வாயிலில் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

சபாநாயகர் மகிந்த யாபா அபயவர்த்தனா, நாடாளுமன்ற செயலாளர் தம்மிகா தசநாயகா ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர், நாடாளுமன்றத்தில் இலங்கை அரசின் கொள்கை அறிக்கையை வெளியிட்டு ரணில் விக்ரமசிங்கே பேசினார். அவர் பேசியதாவது:

இலங்கை பொருளாதாரத்தை நவீனப்படுத்த வேண்டும். இனிமேலும் வெளிநாட்டு கடன்களை சார்ந்து இருக்கக்கூடாது. கடன் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வு காணவேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டு திட்டங்களை எதிர்த்ததுதான் நமது இன்றைய சிக்கலுக்கு காரணம். திரிகோணமலையில் எண்ணெய் வயல் வளாகத்தை இந்தியாவுடன் சேர்ந்து மேம்படுத்த திட்டமிட்டோம்.

ஆனால், அது இந்தியாவுக்கு இலங்கையை விற்பதுபோல் ஆகிவிடும் என்று எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் அத்திட்டம் நிறுத்தப்பட்டது. அதை அனுமதித்து இருந்தால், இன்று எரிபொருளுக்காக பல நாட்கள் வரிசையில் நிற்கும் அவலம் நேர்ந்திருக்காது.

அடுத்த 25 ஆண்டுகளுக்கான தேசிய பொருளாதார கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது. சர்வதேச நிதியத்துடன் (ஐ.எம்.எப்.) பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கடன் மறுசீரமைப்பு திட்டம் தயாரிப்பு பணி இறுதிக்கட்டத்தில் உள்ளது.

அதை சர்வதேச நிதியத்திடம் சமர்ப்பிப்போம். அதுபோல், பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தை இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்போம்.

நாட்டை பொருளாதார சிக்கலில் இருந்து மீட்க வேண்டும். அதற்கு அனைத்து கட்சி அரசு அமைக்க அனைத்து அரசியல் கட்சிகளும் என்னுடன் கைகோர்க்க வேண்டும். நாட்டை வழிநடத்த எல்லா கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும்.

இந்த சிக்கலான நேரத்தில் இந்தியா அளித்த உதவியை குறிப்பிட விரும்புகிறேன். பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு, உரிய காலத்தில் பொருளாதார உதவி வழங்கி, இலங்கைக்கு உயிர் மூச்சு அளித்தது.

அதனால், இலங்கை அரசு சார்பிலும், என் சார்பிலும் பிரதமர் மோடிக்கும், இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எரிபொருள் தட்டுப்பாடு இந்த ஆண்டு இறுதிவரை நீடிக்கும். இருப்பினும், தற்போது பிரச்சினை குறைந்துள்ளது. அனைவருக்கும் நியாயமான அளவுக்கு எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

'தண்டோரா' போட தடை: தலைமைச்செயலாளர் இறையன்பு உத்தரவு

சென்னை, ஆக.4

'தண்டோரா' போட தடை விதித்து தலைமைச்செயலாளர் இறையன்பு உத்தரவிட்டுள்ளார்.

புயல், மழை, வெள்ளம் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை தகவல்களை தெரிவிக்க, வரி வசூல் செய்வதற்கு உள்ளிட்ட அரசின் முக்கிய அறிவிப்புகள் 'தண்டோரா' மூலம் பொதுமக்களிடம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. பண்டைய காலத்தில் தொடங்கப்பட்ட இந்த நடைமுறை இன்றளவும் தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது.

'தண்டோரா' மற்றும் 'பறை' ஆகியவற்றை சத்தமாக இசைத்து, பின்னர் அரசின் அறிவிப்புகள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது. விரல் நுனியில் உலகம் என்ற அளவுக்கு தொழில்நுட்பம் ஆக்கிரமித்துள்ள, இந்த நவீன காலக்கட்டத்தில் 'தண்டோரா' முறையை ஒழித்து கட்டுவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக தலைமைச் செயலாளர் இறையன்பு தனது கைப்பட எழுதி, மாவட்ட கலெக்டர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டு உள்ளதாவது:

மக்களிடம் முக்கிய செய்திகளை விரைவாக சேர்க்கும் விதத்தில் இன்னும் சில ஊர்களில் 'தண்டோரா' போடும் பழக்கம் இருப்பதையும், சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டி வேதனைப்படுவதையும் கண்டேன். அறிவியல் வளர்ந்துவிட்டது, தொழில்நுட்பம் பெருகிவிட்டது. இந்த சூழலில் 'தண்டோரா' போடுவது இன்னும் தொடரவேண்டிய தேவை இல்லை.

ஒலிபெருக்கிகளை வாகனங்களில் பொருத்தி வலம் வரச்செய்வதன் மூலம் மூலை முடுக்குகளில் எல்லாம் தகவல்களை கொண்டு சேர்த்திட இயலும். எனவே 'தண்டோரா' போட கடுமையான தடை விதிப்பது நல்லது.

மீறி ஈடுபடுத்துபவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். இந்த செய்தி ஊராட்சி அமைப்புகள் வரை ஊடுருவும் அளவு பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வேடந்தாங்கல் பறவைகள் காப்பகம் உட்பட

மேலும் 6 ஈரநிலங்களுக்கு 'ராம்சர்' அங்கீகாரம்: வனத்துறைக்கு முதல்வர் ஸ்டாலின் பாராட்டு

சென்னை, ஆக.4–

தமிழ்நாட்டில் ராம்சர் அங்கீகாரம் பெற்ற பகுதிகளின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளதற்கு தமிழக வனத்துறைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டியுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாட்டில் மேலும் 6 ஈரநிலங்கள் (கூந்தன்குளம் பறவைகள் காப்பகம், மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோளகக் காப்பகம், வேம்பனூர், வெள்ளோடை பறவைகள் காப்பகம், வேடந்தாங்கல் பறவைகள் காப்பகம் மற்றும் உதயமார்த்தாண்டம் பறவைகள் காப்பகம்) இன்று ராம்சர் ஈரநில அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

இதனால் தமிழ்நாட்டில் ராம்சர் அங்கீகாரம் பெற்ற பகுதிகளின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. உலக அளவிலான இந்த அங்கீகாரம் தமிழ்நாடு அரசு ஈரநிலங்கள் இயக்கத்துடன் நன்கு பொருந்திப் போகிறது. இந்தச் சிறப்பான சாதனைக்காகத் தமிழ்நாடு வனத்துறைக்கு எனது பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

டெல்லியில் ஒருவருக்கு குரங்கு அம்மை: பாதிப்பு 9 ஆக உயர்வு

புதுடெல்லி, ஆக. 4–

டெல்லியில் மேலும் ஒருவருக்கு குரங்கு அம்மை தொற்று உறுதியாகியுள்ளதன் மூலம், நாடு முழுவதும் குரங்கு அம்மை தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது. இதில் 5 பேர் கேரளாவைச் சேர்ந்தவர்கள். 4 பேர் டெல்லியைச் சேர்ந்தவர்கள். 9 பேரில் 5 பேர் வெளிநாட்டவர்.

டெல்லியில் பாதிக்கப்பட்ட 31 வயதான அப்பெண், காய்ச்சல் மற்றும் கொப்புளங்களுடன் டெல்லி லோக் நாயக் ஜெய் பிரகாஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து அவரது ரத்த மாதிரிகள் சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் அவருக்கு குரங்கு அம்மை தொற்று உறுதியாகியுள்ளது.

Apollo Hospitals Enterprise Limited
Corporate Identity Number : L85110TN1979PLC008035
Regd. Office : No. 19 Bishop Gardens, Raja Annamalaipuram, Chennai - 28, Tamil Nadu
Tel. +91-44-28290956, Fax.+91-44-28290956
Email: investor.relations@apollohospitals.com, Website : www.apollohospitals.com

Apollo HOSPITALS

NOTICE is hereby given that the 41st Annual General Meeting (AGM) of the members of Apollo Hospitals Enterprise Limited will be held at 10.15 a.m., (IST) on Thursday, 25th August 2022 through Video Conferencing (VC) / Other Audio Visual Means (OVAM), in compliance with all the provisions of the Companies Act, 2013 and Rules made thereunder and SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015 read with General Circular dated May 5, 2020 read with circulars dated April 8, 2020, April 13, 2020, June 15, 2020, September 28, 2020, January 13, 2021, June 23, 2021, 8th December 2021, 14th December 2021 and 5th May 2022 (collectively referred to as "MCA Circulars") and circular No. SEBI/Ho/CFD/CMD/2/CIR/ P2022/62 dated 13th May 2022 issued by the Securities and Exchange Board of India (SEBI) to transact the business as set out in the AGM Notice dated July 16, 2022. The information and instructions for members attending the AGM through VC/OVAM are explained in the Notes to the Notice of the AGM. Members participating through VC/OVAM shall be reckoned for the purpose of quorum under Section 103 of the Companies Act, 2013.

In compliance with the relevant circulars, the Notice of the AGM and the Annual Report for the FY 2021-2022 have been sent electronically to all the members of the Company whose email addresses are registered with the Company/Depositary Participants. The aforesaid documents will also be available on the Company's website, www.apollohospitals.com and on the website of the stock exchanges where the shares of the Company are listed i.e., BSE Limited and National Stock Exchange of India Limited at www.bseindia.com and www.nseindia.com respectively. Members can attend and participate in the AGM through VC/OVAM facility only.

Book Closure and Payment of Dividend:- Notice is also hereby given that pursuant to Section 91 of the Companies Act 2013, Rule 10 of the Companies (Management and Administration) Rules 2014 and Regulation 42 of the SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations 2015 "(LODR)" the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from Saturday, 20th August 2022 to Thursday, 25th August 2022 (both days inclusive) to determine eligibility of the members for payment of dividend for the financial year 2021-2022. The Dividend at Rs.11.75 per share, after declaration at the AGM would be paid to those members whose names appear in the Register of Members / Benpos as at the close of working hours on 19th August 2022.

E-Voting:- Pursuant to Regulation 44 of LODR and Section 108 of the Companies Act 2013, read with Rule 20 of the Companies (Management and Administration) Rules 2014 as amended, the Company has engaged the services of National Securities Depository Limited (NSDL) to provide e-voting facility to the members. The details are as under :

1. The Company has fixed 18th August 2022 as the "Cut Off" date to ascertain the eligibility of members for e-voting.

2. The members, whose names appear in the Register of Members / List of Beneficial Owners as on the cut-off date i.e. 18th August 2022 are entitled to avail the facility of remote e-voting in the AGM. Any person, who acquires shares and becomes a member of the Company after dispatch of the notice and holds shares as on the cut-off date may obtain the User ID and password by sending a request at evoting@nsdl.co.in by mentioning Folio No./DP ID and Client ID No. If the members are already registered with NSDL for remote e-voting, then the existing User ID and password can be used for casting the vote.

3. The remote e-voting process would commence on 22nd August 2022 at 9.00 A.M. (IST) and end on 24th August 2022 at 5.00 P.M. (IST) during which period the members may cast their vote electronically. Thereafter, the e-voting module shall be disabled by NSDL.

4. Voting during the AGM shall also be made available to those members who attend the AGM and have not already cast their vote through remote e-voting. Members who cast their votes through remote e-voting should not vote again at the AGM. Detailed procedure for remote e-voting/e-voting is provided in the Notice of AGM.

Scrutinizer:- The Company has appointed Mrs. Lakshmmi Subramanian, Senior Partner, M/s. Lakshmmi Subramanian Associates, Practicing Company Secretaries as the Scrutinizer to scrutinize the process of remote e-voting and voting during the AGM in a fair and transparent manner.

Results:- The Results on the resolutions voted shall be declared within 48 hours of the conclusion of the AGM of the Company. The results declared along with the scrutinizer's report shall be posted on the Company's website : www.apollohospitals.com. and on the website of NSDL (https://www.evoting.nsdl.com) and would also be communicated to the Stock Exchanges.

Manner of registering/updating email addresses :

(a) Members holding shares in physical mode, who have not registered/updated their email addresses with the Company, are requested to send the scanned copy of the following documents by email to the RTA at srirams@integratedindia.in

(i) A signed request letter mentioning their name, folio no. and address.
(ii) Self-attested copy of the PAN Card and
(iii) Self-attested copy of any document (eg Aadhar Card, Driving License, Election Identity Card, Passport) in support of the address of the Member.

(b) Members holding shares in dematerialised mode, who have not registered/ updated their email addresses with the Depository Participant(s), are

For APOLLO HOSPITALS ENTERPRISE LIMTIED

Place : Chennai
Date : 3rd August 2022

S.M. KRISHNAN
SR. VICE PRESIDENT – FINANCE & COMPANY SECRETARY

கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட்
Kothari SUGARS AND CHEMICALS LTD
பதிவு அலுவலகம்: "கோத்தாரி பில்டிங்ஸ்" நெ.115, மஹாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
CIN : L15421TN1960PLC004310 Phone 044-35225526 / 35225529
Email: secdept@hckgroup.com Website: www.hckotharigroup.com/kscl

30.06.2022 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்
(ரூ. இலட்சத்தில்)

விவரங்கள்	30.06.2022 அன்று முடிவடைந்த காலாண்டு	31.03.2022 அன்று முடிவடைந்த காலாண்டு	30.06.2021 அன்று முடிவடைந்த காலாண்டு	31.03.2022 அன்று முடிவடைந்த ஆண்டு முடிவுகள்
	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம்	15,740.72	15,101.70	9,086.30	42,348.59
வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம்(-)	3,283.33	2,342.57	1,050.47	3,826.18
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+)/ நஷ்டம் (-)	3,283.33	1,910.44	1,050.47	3,936.11
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+)/ நஷ்டம் (-)	2,286.78	1,643.21	834.94	3,403.22
நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் /(நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்]	2,276.92	1,640.60	834.94	3,375.87
சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.10/-)	8,288.86	8,288.86	8,288.86	8,288.86
ரிசர்வுகள் (முந்தைய வருட பேலன்ஸ் ஷீட்டில் காண்பிக்கப்பட்டுள்ளபடி மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	-	13,711.98
பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.10/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்)				
(அ) அடிப்படை	2.76	1.98	1.01	4.11
(ஆ) டைல்யூடெட்	2.76	1.98	1.01	4.11

குறிப்பு : மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியாலிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.hckotharigroup.com/kscl ஆகியவற்றில் கிடைக்கும்.

கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட்டுக்காக
அர்ஜுன் B. கோத்தாரி
நிர்வாக இயக்குநர்

இடம் : சென்னை
நாள் : 03.08.2022

ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்
Redington SEAMLESS PARTNERSHIPS
பதிவு அலுவலகம்: ரெடிங்டன இல்லம், சென்டர் பாயிண்ட், ப்ளாட் எண் 11 (SP),
திரு. வி. கா. தொழில்துறை எஸ்டேட், கிண்டி, சென்னை - 600 032.
வலைதளம்: www.redingtongroup.com | மின்-அஞ்சல்: investors@redington.co.in
CIN: L52599TN1961PLCO28758
போர்டு எண்: +91-44-42243353 | ஃபேக்ஸ் எண்: +91-44-22253799

ஜூன் 30, 2022 - உடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாதது ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை
ரூ. கோடிகளில்

வ. எண்	விவரங்கள்	ஒருங்கிணைந்தவை			
		முடிந்த காலாண்டு ஜூன் 30, 2022	முடிந்த காலாண்டு மார்ச் 31, 2022	முடிந்த காலாண்டு ஜூன் 30, 2021	முடிந்த ஆண்டு மார்ச் 31, 2022
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் இருந்து மொத்த வருமானம்	16,803.14	17,301.76	13,454.05	62,644.01
2.	வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு முன் லாபம்	413.68	443.54	301.36	1,622.36
3.	வரிக்கு முன் லாபம்	413.68	443.54	301.36	1,622.36
4.	வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு பின் லாபம்	326.34	355.57	239.15	1,314.87
5.	விரிவான மொத்த வருவாய்	465.56	371.23	295.46	1,248.97
6.	பங்கு மூலதன மதிப்பு	156.29	156.29	78.07	156.29
7.	இருப்புகள் மற்றும் உபரி (கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு தவிர மற்ற பங்கு)	5,922.69	5,454.53	4,901.29	5,454.53
8.	கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு	174.19	174.13	244.69	174.13
9.	மொத்த நிதி சொத்துக்கள்	6,253.17	5,784.95	5,224.05	5,784.95
10.	நிலுவையில் உள்ள கடன்	1,221.88	632.79	588.63	632.79
11.	கடன்-பங்கு விகிதம்	0.19	0.10	0.11	0.10
12.	ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.2/-) (முடிந்த காலண்டுக்கான நிலையில் அல்லாத மதிப்பு)				
	அ. அடிப்படை (ரூ.)	4.04	4.46	3.04	16.40
	ஆ. இளகியது (ரூ.)	4.04	4.45	3.04	16.39
13.	மூலதன மீட்பு கையிருப்பு	-	-	2.22	-
14.	கடன் சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை)	6.37	14.41	10.81	13.41
15.	வட்டி சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை)	14.71	23.79	15.96	22.77

குறிப்புக்கள்

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம்
ரூ. கோடிகளில்

வ. எண்	விவரங்கள்	தனிநிலை			
		முடிந்த காலாண்டு ஜூன் 30, 2022	முடிந்த காலாண்டு மார்ச் 31, 2022	முடிந்த காலாண்டு ஜூன் 30, 2021	முடிந்த ஆண்டு மார்ச் 31, 2022
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய்	7,611.64	7,778.89	5,359.97	27,018.94
2.	வரிக்கு முன் லாபம்	202.55	165.89	130.28	1,104.40
3.	வரிக்கு பின் லாபம்	149.85	123.46	95.59	935.07

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை www.nseindia.com மற்றும் மும்பை பங்குசந்தை www.bseindia.com ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.redingtongroup.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.

3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஆகஸ்ட் 2, 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, நிறுவன இயக்குநர்கள் குழும கூட்டத்தில் ஆகஸ்ட் 3, 2022 ஒப்புதல் வழங்கப்பட்டது.

ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட் சார்பில்
எஸ் வி கிருஷ்ணன்
முழுநேர இயக்குனர் மற்றும் உலகளாவிய தலைமை நிதி அதிகாரி

இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 3, 2022